2011 செப்டம்பர் 5]

நிறைவேற்றித் தரலாமென்று இருந்தேன். அதற்குள் அவர் இப்போது, பெருந்துறை தொகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய 24 மணி நேரமும் இயங்கும் பன்முக கால்நடை மருத்துவமனை அமைக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார். அவருக்கு பாலிடெக்னிக் வேண்டுமா? இந்த மருத்துவமனை வேண்டுமா? எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று அவரே முடிவு செய்து சொன்னால் அதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** கருணைத் தாயாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, வாழ்கின்ற வள்ளலாக இருந்து எங்களைக் காத்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களே, எங்களுடைய பெருந்துறை தொகுதி மக்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்மீது என்றைக்கும் தீராத விசுவாசம் கொண்டவர்கள், அம்மாவினுடைய கருணைப் பார்வையை நோக்கியிருக்கின்ற காரணத்தினாலே தாயுள்ளத்தோடு அம்மா அவர்கள் இந்த இரண்டு திட்டங்களையும் வழங்கி அருளவேண்டுமாய் அம்மா அவர்களுடைய பாதங்களில் வைத்து, என் கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### மாண்புமிகு முதலமைச்சர் தனது சொத்துக் கணக்கை வெளியிடாதது போன்று பத்திரிகை ஒன்றில் வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆங்கில நாளிதழ் ஒன்று காலைப்

[முனைவர் செ.கு. தமிழரசன்][2011 செப்டம்பர் 5

பதிப்பில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவருடைய சொத்துப் பட்டியலை இதுவரையிலே வெளியிடவில்லை என்கிற தோற்றத்தை ஏற்படுத்துகிற வகையிலே ஒரு தலைப்புச் செய்தியை வெளியிட்டு இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதலமைச்சர்களுக்கே முன்னுதாரணமாக இருக்கக்கூடிய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) வஞ்சகர்களும், வஞ்சனைகளும் நிறைந்திருக்கின்ற அரசியல் உலகில், போலிகளும், பொய்மைகளுமே பூரித்து நிற்கின்ற அரசியல் உலகில், நம்பகத் தன்மைக்கும், வெளிப்படைத் தன்மைக்கும் இலக்கணமாக இருக்கக்கூடிய ஓர் அரசியல் தலைவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–05*

பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் ஞானி பிளாட்டோ என்பவர் சொல்கிறபோது, "ஆட்சி அதிகாரத்தின் தலைமைப் பீடத்திற்கு வருகிறவர்களுக்கு குடும்பம் என்று ஒன்று இல்லாமலிருந்தால் அதுவே பாராட்டத்தக்கதாக இருக்கும்" என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குத் தெரிந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குக் கோடானுகோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இராணுவக் கட்டமைப்புப் போன்ற ஓர் அமைப்புதான் குடும்பமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதும் பரவிக் கிடக்கிற 10 கோடி தமிழ் மக்கள்தான் சொந்தமாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'மனசாட்சியைத் தவிர வேறு எதற்கும் அஞ்சமாட்டேன், என்னுடைய மனசாட்சிக்கு மட்டுமே நான் அஞ்சுவேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கிணங்க, துணிவுக்கே துணிவு தருகிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இதுகுறித்து தங்கள்வாயிலாக விளக்கம் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு உறுப்பினர் முனைவர்

2011 செப்டம்பர் 5] [செல்வி ஜெ ஜெயலலிதா]

செ.கு. தமிழரசன் அவர்கள் குறிப்பிட்ட ஆங்கிலப் பத்திரிகை 'Deccan Chronicle', ஏதோ பெரிய இரகசியத்தைக் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டதுபோல் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. என்னுடைய சொத்துகள் பற்றிய விவரத்தில் எந்தவிதமான இரகசியமும் இல்லை; எந்தவிதமான ஒளிவுமறைவும் இல்லை.

இந்தியத் தேர்தல் ஆணையம் தற்போது விதித்திருக்கிற ஒரு விதியின்படி, அது சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், மாநிலங்களவைத் தேர்தலாக இருந்தாலும், ஒரு வேட்பாளர் தேர்தலில் போட்டியிட விரும்பினால், தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும்போதே தனது சொத்துகளின் முழு விவரத்தையும் வேட்பு மனுவுடன் சேர்த்துத் தாக்கல் செய்யவேண்டும். அதன்படி, ஐந்து மாதங்களுக்கு முன்புதான், கடந்த ஏப்ரல் 13 ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், நான் ஸ்ரீரங்கம் தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட்டபோது, எனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும்போதே எனது சொத்துகளின் முழுப் பட்டியலையும் எனது வேட்பு மனுவுடன் சேர்த்துத் தாக்கல் செய்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் சொத்துகள் பற்றிய விவரம் அப்போதே அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இருப்பினும், இந்தக் கேள்வி இப்போது எழுந்திருப்பதால், அந்த விவரத்தை மீண்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். தேர்தலில், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும்போது எனது சொத்துகளின் மதிப்பை நான் தாக்கல் செய்துள்ளேன். அதன்படி, அசையும் சொத்தின் மதிப்பு 13,03,27,979 ரூபாய்; அசையா சொத்தின் மதிப்பு 38,37,40,000 ரூபாய்; ஆகமொத்தம், 51,40,67,979 ரூபாய். இது, நான் ஏற்கெனவே தாக்கல் செய்து வெளியிடப்பட்ட விவரம்.

தேர்தல் முடிந்து, நான் முதலமைச்சராகி மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. இந்த மூன்று மாத காலத்தில், நான் எந்தப் புதிய சொத்துகளையும் வாங்கவில்லை. ஆகவே, ஏற்கெனவே வெளியிடப்பட்ட சொத்து விவரத்தை, மீண்டும் வெளியிட வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*